பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**22 04 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மேற்குவங்க சட்டப்பேரவைக்கு முதற்கட்டமாக **152** தொகுதிகளில் நடைபெற உள்ள வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

**2.** கேரள மாநிலம் திருச்சூரில் நேரிட்ட வெடி விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை **13**ஆக அதிகரித்துள்ளது.

**3.** நாட்டின் கடல்சார் உணவு ஏற்றுமதி, சென்ற நிதியாண்டில் **72** ஆயிரத்து **300** கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

**4.** ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தையை தொடர ஏதுவாக சண்டை நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**5.** உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுடன் மேற்குவங்க மாநில சட்டப்பேரவைக்கு முதற்கட்டமாக 152 தொகுதிகளில் வாக்குப் பதிவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தொகுதிகளில் நேற்று மாலையுடன் பிரச்சாரம் முடிவுக்கு வந்துள்ளது.

பிஜேபி, திரிணாமுல் காங்கிரஸ், காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

16 மாவட்டங்களில் அடங்கிய இந்த தொகுதிகளில் ஆயிரத்து 478 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

நாளை வாக்குப்பதிவை நேர்மையாகவும், அமைதியாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

முதற்கட்ட தேர்தலில் 44 ஆயிரத்து 376 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 5 ஆயிரத்து 444 வாக்குச்சாவடிகள் மகளிரால் நிர்வகிக்கப்படுகின்றன.

மேலும் 207 வாக்குச்சாவடிகள் மாதிரி வாக்குச்சாவடிகளாக செயல்படும் என்றும், மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள் சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், அழியா மை மற்றும் தளவாடங்களை அனுப்பி வைக்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்கள், வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தீவிரமாக மேற்கொண்டுள்ளனர்.

வாக்குப்பதிவு முழுவதுமாக இணையதளம் மூலம் கண்காணிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மாநில காவல்துறையினருடன் துணை ராணுவப் படையினரும் குவிக்கப்பட்டு வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறுவதை உறுதி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இம்மாநிலத்தில் இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 142 தொகுதிகளில் வரும் 29ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

கேரளம், அசாம், புதுச்சேரியில் கடந்த 9ஆம் தேதி ஏற்கனவே வாக்குப்பதிவு நிறைவடைந்துள்ள நிலையில், தமிழகம், மேற்குவங்கத்தில் பதிவாகும் வாக்குகளும் அடுத்த மாதம் 4ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகும்.

<<<<>>>>

உலக அளவில் மாறி வரும் சூழலுக்கு ஏற்ப பாதுகாப்பு துறையில் புதிய அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

மூன்று நாள் பயணமாக ஜெர்மனி சென்றுள்ள அவர், அந்நாட்டு பாதுகாப்புத்துறை தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுக் கூட்டத்தில் உரையாற்றினார்.

தற்போது உலக நாடுகள் புதிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதாகவும், அதிநவீன தொழில்நுட்ப மாற்றங்கள் இந்த நிலைமையை மிகவும் ஒருங்கிணைத்து செயலாற்ற வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜெர்மனியுடன் இணைந்து இருதரப்புக்கும் பயனளிக்க கூடிய வகையிலான தொழில்நுட்ப பங்களிப்பை அதிகரித்திருப்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

ஜம்மு-கஷ்மீரின் பஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் கடந்த ஆண்டு இதே நாளில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் உட்பட 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

பஹல்காம் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இந்திய ராணுவம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மனிதாபிமான எல்லைகளை தீவிரவாதிகள் மீறும்போது, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து கடந்த ஆண்டு மே மாதம் 6 மற்றும் 7ஆம் தேதிகளில் இந்திய ராணுவத்தினர் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடங்கினர்.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்கள் மற்றும் கட்டமைப்புகளை இந்திய ராணுவத்தினர் தகர்த்தனர்.

<<<<>>>>

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தில் நேரிட்ட வெடி விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளது.

திருச்சூரில் நடைபெறும் புகழ்பெற்ற பூரம் திருவிழாவில் வெடிப்பதற்காக 5 ஏக்கர் பரப்பளவில் வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் வெடித்ததில் இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

வரும் 26ஆம் தேதி நடைபெற உள்ள திருவிழாவில் பட்டாசுகளை வெடிக்க திட்டமிட்டிருந்த நிலையில் வெயிலின் தாக்கம் காரணமாக அவை வெடித்ததாகவும், அப்போது அங்கிருந்தவர்களில் 13 பேர் உயிரிழந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் கடல்சார் உணவு ஏற்றுமதி, சென்ற நிதியாண்டில் 72 ஆயிரத்து 300 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

கடல் உணவு ஏற்றுமதியின் அளவு 19 லட்சம் மெட்ரிக் டன்னை எட்டியுள்ளதாக கடல்சார் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் வெளியிட்ட தகவல் தெரிவிக்கிறது.

கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி வாருவாயில் மூன்றில் இரண்டு பங்கு வர்த்தகத்துறை சார்ந்ததாக உள்ளது என்று அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஈரானுக்கு எதிரான மோதலை முடிவுக்கு கொண்டு வர அமைதிப் பேச்சுவார்த்தையை தொடர ஏதுவாக அந்நாட்டுடனான சண்டை

நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானுடனான இரண்டு வார கால சண்டை நிறுத்தம் இன்று காலையுடன் முடிவடைய இருந்த நிலையில், திரு. ட்ரம்ப் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பாகிஸ்தான் கேட்டுக்கொண்டதன் பேரில் தாம் இந்த முடிவை எடுத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

என்றாலும் ஈரான் துறைமுகங்கள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் அமெரிக்க கடற்படையினரின் தடை தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைதிப் பேச்சுவார்த்தையில் சுமூகத் தீர்வு ஏற்படும் வரை இந்த நடவடிக்கை தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

திரு. ட்ரம்ப்பின் இந்த தன்னிச்சையான அறிவிப்பை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டதா என்பது குறித்து எந்தவொரு தகவலும் வெளியாகவில்லை.

<<<<>>>>

இதனிடையே, பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் நடைபெற இருந்த இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காக

செல்ல இருந்த அமெரிக்க துணை அதிபர் திரு. **J.D. Vance** தமது பயணத்தை ரத்து செய்துள்ளார்.

<<<<>>>>

பல்கேரியா நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பல்கேரியா முன்னேற்ற கட்சியின் தலைவர் திரு. **Rumen Radev**-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அண்மையில் நடைபெற்ற தேர்தலில் திரு. **Rumen Radev**-ன் கட்சி மிகப்பெரிய வெற்றியை அடைந்துள்ள நிலையில் அந்நாட்டுடன் இணைந்து செயல்படுவதை தாம் எதிர்நோக்கி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பன்முக உறவுகளையும், நட்புறவையும் மேலும் வலுப்படுத்துவதுடன் இரு நாடுகளும் விரிவான ஒத்துழைப்புடன் செயலாற்ற விரும்புவதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெறும் இப்போட்டியின் **10** மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் **Shiva Narwal** தங்கப் பதக்கத்தையும், **Chirag Sharma** வெண்கலப் பதக்கத்தையும், **10** மீட்டர் ஏர்-ரைஃபில் பிரிவில் **Panaah Bhugra** வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

-------------

**Slovakia**-வின் **Senec** நகரில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Akash Pal - Sutirtha Mukherji** இணை பட்டம் வென்றது.

**கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 3-0 சென்ற செட் கணக்கில் ஸ்லோவாக்கியாவின் Lubomir Pistej - Barbora Kukulkova இணையை வென்றது.**

------------

**Grashopper** கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் **Zurich**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் சுவிட்சர்லாந்தின் **David Bernet**-ஐ **11-8, 9-11, 11-7** என்ற செட் கணக்கில் வென்றார்.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 47 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

ஹைதராபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி நிர்ணயிக்கட்ட 20 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 242 ரன் குவித்தது.

தொடக்க ஆட்டக்காரர் அபிஷேக் ஷர்மா 68 பந்துகளில் 135 ரன் சேர்த்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

243 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிங்கிய தில்லி அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுகளை இழந்து 195 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் லக்னோ அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-------------

இந்தியா - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

ஜோகன்னஸ்பர்கில் இப்போட்டி இந்திய நேரடிப்படி இரவு மணி 9.30க்கு தொடங்கும்.

5 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் ஏற்கனவே முடிவடைந்த இரண்டு ஆட்டங்களிலும் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது.

**<<<<The End>>>>**